(5) அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சிகள் உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அச்சிட்டு@ அனுப்பியுள்ளவாறு நடைபெறும். அடுத்து மின் வாரியத்தின் 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம் தொடரும். திரு. என். கே. பழனி சாமி.

திரு. முனு ஆதி: நான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் என்ன ஆயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை முடிவு தெரிவிக்கப் படும்.

(6) மின் வாரியத்தின் 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. என். கே. பழனிசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சர்க்கார் கொடுத்து இருக்கக்கூடிய மின்சார வாரிய வரவு செலவுக் கணக்கில் 'கேபிடல் அவுட்லே' என்பதற்காக 43 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 230 கோடி வருஷத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும்போது, கிட்டத்தட்ட 6-ல் ஒரு பங்குதான் அந்த ஒதுக்கப் பட்ட தொகையில் இதற்காக ஒதுக்கியிருப்பது சரியா என்று கேட்க ஆசைப்படுகிறேன். காரணம், இன்று மின்சாரம் விவசாயத் திற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் மிகமிகத் தேவையாக இருக்கிறது. இப்படி இதனுடைய தேவை அதிகரித்துக்கொண்டிருக்கிறபோது, 43 கோடி மட்டும் ஒதுக்கப்பட்டிருப்பது சரியல்ல. 3-ல் ஒரு பங்காவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போன வருடம் வரவு செலவுக் கணக்கு சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் மாஸ்டர் பிளான் என்று சொல்லி அதற்கு சப்-ஸ்டேஷன் கட்டுவது, லைன்கள் மற்றவற்றை அபிவிருத்திச் செய்வது

@ 291–292-ம் பக்கத்தில் இணைப்பு III-ஆக அச்சிடப் பட்டுள்ளது.